**மிதவாதிகளின் இயக்கம்**

மலேசியா ஒரு தேசமாக சில இருளின் கணங்களை எதிர்நோக்கி வருகிறது. அண்மைய காலமாகவே இன,மத சகிப்புத்தன்மையில் அரசியல் திடம் குறந்து காணப்படுவதால் இயற்கையாகவே கருத்தியல், தீவிரவாதம் மற்றும் தீவிரபோக்கு தீவிரம் காட்டத்தொடங்கியுள்ளது. இவை யாவும், வாளை முத்தமிட்டல், மாட்டுத்தலையை காலில் மிதித்து ஆர்ப்பாட்டம் செய்தல் போன்ற சாராம்சத்தில் குறைந்தது கிடையாது.

மூர்க்கத்தனமான ஆரவாரத்தோடு, இரத்தம் சிந்த மருட்டல் விட்டவர்களை சுதந்திரமாக நடமாட விட்டுவிட்டு, மஞ்சள் வர்ண உடையை அணிந்தவர்களை கைதுசெய்த நடவடிக்கை துரதிஷ்டமானது மட்டுமன்றி அறிவுக்கெட்டாததாகவும் தென்படுகிறது.

கடந்த "பெர்சே 2.0" பேரணி குடிமக்களின் ஏமாற்ற நிலையை உச்சமாக வெளிப்படுத்தினது என்பதோடு, இதுவே மிதவாதிகள் இயக்கத்தின் தொடக்கம் எனவும் நான் சந்தேகிக்கிறேன்.

அரசாங்கத்தின் கூற்றின்படி ஆர்ப்பாட்டம் நமது பண்பாடு இல்லைதான். ஆனால் பல்லாயிரக்கணக்கான அமைதிவிரும்பிகளை வீதிக்கு கட்டாயமாக இட்டுச்சென்ற சம்பவத்தை நாம் காணும்பொழுது, (காவற்படையின் தடுப்பினாலும் பட்டணத்தில் விதித்த கட்டுப்பாட்டினாலும் இன்னும் பல ஆயிரங்கள் பங்கெடுக்க இயலாமற் போனதும் அடங்கும்) சில உள் ஆய்வினை செய்யாமல் நாம் இருக்க முடியாது.

"பெர்சே2.0" சட்டப்பூர்வமான விவாதங்கள் என்னை "நீதி தேவதை"யின் சிலையை நினைவுறுத்துகிறது. அவள் கண்கள் கறுப்புத்துணியால் கட்டப்பட்டு, ஒரு கையில் வாளும் மற்ற கையில் ஒரு தராசும் பிடித்திருக்கக் காண்போம். ஒரு தலை பட்சமற்ற, பேராசை மற்றும் ஊழல், அச்சம் இவற்றை உதறித்தள்ளிய், சமத்துவமும், பாரபட்சமற்ற சட்ட நிர்வாகமும் உள்ள நிலைப்பாட்டை நீதியாக வெளிக்கொணரும் சின்னமாக விளங்குகிறாள்.

அது போல நமது தலைவர்களும் நீதிதேவதையின் நிலையை தரித்து, பரிவுமிக்க குடிமக்களின் உண்மை அறைகூவலை நிதானித்து, பேரணியின்போது அவர்கள் நடத்தைகளை ஆக்கப்பூர்வமாய் மதிப்பீடு செய்திருந்தால், தலைவர்களின் மறுமொழி இன்னும் முதிர்ச்சி அடைந்ததாக இருந்திருக்கும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் எந்தவொரு தரப்போ, அல்லது அரசாங்கத்தின் ஆதரவாக "தூய்மையான வாக்காளர் பதிவு", "ஊழலை நிறுத்துக", "அழியாத மையை பயன்படுத்துக" போன்ற முழக்கங்கள் எழும்பியிருந்தால், முற்போக்காக சிந்திப்பவர்கள், நேர்மையானவர்கள் என அவர்களை பாராட்டியிருப்பார்கள். ஆனால் மலேசியாவில் இதேவித கோரிக்கைகளை முன்வைக்கிறவர்களை வைதிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அரசாங்கத்தை சார்ந்தவர்கள் அல்லர். எனவே ஜூலை 9தில் அரசு எடுத்த நடவடிக்கையில் நாம் கண்டது யாதெனில் பக்குவப்படாத தீவிர அரசியல்வாதிகளின் சுருக்கம்.

வாக்காளர் பதிவு சீர்திருத்தங்களும், அமைதிப் பேரணியின் உரிமையும் நியாயமானவையும் நடுநிலை தவறாததும் என கருதுகிறேன். "பெர்சே2.0" எதிர்க்கட்சிக்கு சாதகமானதன்று ஆனால் ஜனநாயகத்திற்கு ஒத்தது

மலேசிய குடிமக்கள் ஜனநாயகத்தில் முதிர்ச்சிஅடைந்து வருவதினால் நியாயமற்ற அமலாக்கத்தையும், ஊழலையும், வாக்குரிமையை விலைகொடுத்து வாங்குவதையும் இனியும் பொறுத்துகொள்ளமாட்டார்கள். நீதி தேவதையைப் போல கண்கள் கட்டப்பட்டவர்களாய் இருக்கும்பொழுது நியாயம் நிறத்தைப் பாராது. அதாவது சிவப்பு நிற ஆடையோ, பச்சை நிற பதாகையோ, மஞ்சள் அல்லது கறுத்த நிற தோலுடையவர்கள் என வேறு படுத்தாது

அரசு செய்தாலோ அல்லது எதிர்க்கட்சி செய்தாலோ அல்லது யாராயிருந்தாலும், சரி என்றால் சரி, தவறு என்றால் தவறுதான்.

நம் தேசத்தில் திருச்சபை சமாதானத்தை விரும்புகிறவர்களாக இருத்தல் அவசியம் என்பது எனக்கு தெரியும். ஆனால் அதை விட முக்கியம் நாம் பிரமாணத்திற்குரியவர்கள். வேதப்பிரமாணம் நமக்கு கொள்கைகளையும், தகுதிகளையும், நியாயத்தையும் பிழையானவற்றையும் கற்றுத்தருகிறது.

கிறிஸ்து, நாம் நம் அயலாரை நம்மை நேசிப்பது போலவே நேசிக்கும்படி பிரமாணம் தந்திருக்கிறாரே அன்றி கிறிஸ்து அற்ற தன்மையில் நடந்துகொள்ளச் சொல்லவில்லை. எல்லா வேளைகளிலும் சுபீட்சத்தை உறுதிப்படுத்துகிற சமாதானத்தின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும்.

முரண்பாடுள்ள செய்கைகள் செய்யத்தூண்டும் உணர்வுகளுக்கு நாம் இல்லை எனக் கூறவேண்டும். ஒத்துழைப்பு நிறைந்த அணுகுமுறைக்கு பதில் எதிர்ப்புமுறை அமல்படுத்தப்படும்பொழுது, ஆக்ரோஷமான குணாதிசயங்கள் கொண்டவர்கள் அத்தகைய எதிர்ப்பாளர்கள் குழுவிற்கு தலைமை ஏற்பர்.

சொல்வது ஒன்று செய்வது முறைகேடாக போகும் பட்சத்தில் நீதி தேவதையை நாம் நினைவு கூர்ந்து கண்கள் கட்டப்பட்டிருந்தாலும், நாவில் துணி வைத்து அடைக்கப்பட சபை இடங்கொடுக்கக்கூடாது. இங்குதான் அதிகபட்சம் மவுனிகளாக இருக்கும் சபையார் பேச வேண்டும். வேதம் நம்மை பேசச்சொல்லி கட்டளையிடுகிறது.

கொடுமையாளர்களினால் உருவாக்காப்படுகிற சேதங்களை எதிர்த்து பேசவும் ஜனநாயகம் சாகாமலிருக்கவும் மிதவாதிகள் உறுதிப்படுத்தவேண்டும்.

அரசியல் சீரழிவிற்கு நாம் துணைபோகாமல் சபை தன் பொறுப்பினை உணர்ந்து மதவாதிகள் மற்றும் மாய்மாலக்காரர்கள், மக்களையும் ஜனநாயகத்தையும் தங்கள் ஊழலுக்கும் நெறி குலைச்சலுக்கும் பலிகடா ஆக்குவதை எதிர்க்கவேண்டும்.

மலேசியர்களைத்தவிர வேறு எவரும் மலேசியாவைக் காப்பாற்றமுடியாது. மிதவாதிகள் எழும்பி பேசவும், கேட்கப்படவும், தங்கள் தேசத்திற்கு தங்கள் பங்கை ஆற்றவும் நேரம் வந்துவிட்டது.

அருட்திரு இயு ஹோங் செங்
தலைவர் -என்.இ.சி.எப்